**வவுனியா நகர சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை22 ஜுன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 22 ஜுலை 2020 ஆந் திகதியும்சபையின் தவிசாளருக்குஅனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா நகர சபையின் நிதிக்கூற்றுக்கள்2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையில் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டிலுள்ள 40 எண்ணிக்கையான காணிகள் 10 வருடங்களுக்கு மேலாக பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்படாமையினால் மொத்த சொத்துக்களின் பெறுமதியானது நிதிக்கூற்றுகளில் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது | சபையினுடைய அனைத்து சொத்துக்களின் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் | சபையின் பயன்பாட்டில் உள்ள 40 எண்ணிக்கையான காணிகளில் 15 காணிகள் எமக்கு பாராதீனப்படுத்தப்பட்டுள்ளதுஏனையவை காணிகளை பாராதீனப்படுத்தித்தருமாறு வவுனியா பிரதேச செயலாளரிடம் கோரியிருந்தோம். எனினும் இதுவரை இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக எமக்கு அறியத்தரப்படவில்லை. |

**(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின்கருத்துரை |
|---|---|---|
| ரூபா 626,776,162பெறுமதியான 03கணக்கு விடயங்களுக்குரிய நிலையான சொத்து பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக உறுதி செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | தங்களால் குறிப்பிடப்பட்டரூபா 626,776,162 ஆனது காணிகட்டடங்கள் தொடர்பானதாகும். நகர சபைக்குரித்தான காணிகளை மதிப்பீடு செய்யப்படுதல் தொடர்பாக பிரதேச செயலாளர்,நில அளவை திணைக்களம் மற்றும் விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன்இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ) நகரசபைகள் கட்டளைச்சட்டம்** | | | |
| அத்தியாயம் III பிரிவு 54(2) | உரிய காலப்பகுதியில் அறவீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | ஆதனவரி நிலுவைகள் தொடர்ந்தும் நடுகட்டு உத்தியோகத்தர்கள் மூலம் தொடர்ந்து அறவீடுகள் செய்யப்பட்டுவருகின்றது. கடந்த கால நிலுவைகள் களப்பரிசோதனை மூலம் அறவீடுகள் செய்யப்படுகின்றது. |
| **(ஆ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| (i)நிதி ஒழுங்குவிதி 751(2) | சபையிலுள்ள மின் இணைப்பு பொருட்களுக்கான பொருட்பதிவேடு தனியாக பேணப்பட்டு பதிவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | சபையிலுள்ள மின் இணைப்பு பொருட்களுக்கான பொருட்பதிவேடு தனியாக பேணப்பட்டு பதிவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii)நிதி ஒழுங்குவிதி 571(2) மற்றும் (3) | கூட்டுமொத்தம்ரூபா 565,921 பெறுமதியான 14 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிதி பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | மீளளிக்கக்கூடிய காலம் கடந்த வைப்புகள் யாவும் தீர்வு செய்யப்பட்டுள்ளது. ஏனையவைகளில் UDA வைப்புகள் உரியவர்களால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கானது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வரை வருடாந்தம் 10% |

| | | | |
|---|---|---|---|
| | | | வைப்பிலிருந்து வருடாந்தம் கழிக்கப்பட்டு சபை வருமானங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றது. |
| (iii)நிதி ஒழுங்குவிதி 371(5) | முற்பணக்கணக்கில் நீண்ட காலமாக உள்ள ரூபா 74,084வினை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்க மைய செயற்படல் வேண்டும். | இது தொடர்பாக குறித்த காலப்பகுதியில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களிடமிருந்து விளக்கங்கள் பெறப்பட்டுள்ளதுடன், தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |
| **(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைநூல்** | | | |
| பிரிவு178(3) | திறமையான ஒப்பந்த வேலைகளை முன்னெடுத்திருக்கும் சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகை வழிகாட்டி கைநூலுக்கமைய செயற்படல் வேண்டும். | திறமையான ஒப்பந்த வேலைகளை முன்னெடுத்திருக்கும் சமூகமட்ட அமைப்புகள், சனசமூக நிலையங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதுடன், முறையான பதிவேடு 2020 ஆம் ஆண்டிலிருந்து பேணப்பட்டு வருகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம்ரூபா 69,326,342 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின்மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம்ரூபா71,516,844தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழேதரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 23,562,046 | 63,089,570 | 23,622,569 | 39,527,523 | 23,512,046 | 24,788,149 | 23,383,989 | 41,245,333 |
| (ii) | வாடகைகள் | 41,276,025 | 44,789,248 | 31,532,168 | 3,513,223 | 42,058,834 | 36,094,056 | 35,901,420 | 5,300,770 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,565,000 | 2,565,000 | 2,410,455 | -- | 2,510,000 | 2,167,702 | 2,167,702 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 65,095,000 | 105,964,407 | 72,611,420 | 40,869,407 | 56,331.000 | 54,783,351 | 63,185,799 | 36,594,039 |
| | **மோத்தம்** | **132,498,071** | **216,408,225** | **130,176,612** | **83,910,153** | **68,137,211** | **117,833,258** | **124,638,910** | **83,140,142** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 60,523 தொடக்கம் ரூபா 9,743,857வரையான வேறுபாடுகள் காணப்படுகிறது. | பாதீடானது சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 2.2.3 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| வீதங்கள் மற்றும் ஆதனவரி நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 38,195,296இனைஅறவிடுவதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் 07 வருடங்களுக்கு மேலாக ஆதனவரி மீள்மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை ஆதலால் ஆதனவரி வீதங்களின் அறவீடு மற்றும் நிலுவைகளின் சரியான தன்மையினைத் திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியவில்லை. | வீதங்கள் மற்றும் ஆதன வரி நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் மற்றும் மீள்மதிப்பீடும் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிலுவைகளை அறவிடுவதற்காக நடுக்கட்டு உத்தியோகத்தர்களுக்கு நிலுவைப்பட்டியல்கள் வழங்கப்பட்டு அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பல நடமாடும் சேவைகளும் மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன். |

### 2.2.4 வாடகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அறவிடப்பட வேண்டிய வாடகைகள் ரூபா 3,513,223 தொடர்பாக சபையினால் கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து கடைகளுக்குமான கடை வாடகைகள் உரியகாலத்தில் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் | அறவிடப்பட வேண்டிய வாடகை குத்தகை நிலுவைகள் ரூபா 1,765,167அறவிடப்பட்டுள்ளது மிகுதி நிலுவை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான வாடகைக்கு விடப்பட்டிருந்த 58 கடைகள் தொடர்பில் கடந்த 01 தொடக்கம் 47 ஆண்டுகளாக அவற்றுக்கான வாடகை ஒப்பந்தம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாடகை ஒப்பந்தம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் | ஒப்பந்தம் செய்யப்படாத கடைகளில் கூடுதலானவை கைமாற்றம் செய்யப்பட்டுள்ளது அதாவது நகரசபைக்கு தெரியப்படுத்தப்படாமல் கடைகள் விற்கப்பட்டோ அல்லது வாடகைக்கு விடப்பட்டுள்ளது அத்துடன் சிலர் வெளிநாடு சென்றுள்ளனர் இதனால் வாடகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை எமது அனுமதி இன்றியும் எமக்கு தெரியப்படுத்தப்படாமலும் மேற்கொள்ளப்பட்ட உரிமை மாற்றம் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது |
| (இ) | வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான 315 கடைகள் மற்றும் காணிகளுக்கான வாடகைக்கு வழங்கப்பட்ட வாடகை ஒப்பந்த காலம் நிறைவடைந்து 01 தொடக்கம் 33 வரையான காலங்கள் கடந்த நிலையிலும்அவை தொடர்பில் மீள் ஒப்பந்தம் செய்யப்பட்டிராது பயன்பாட்டிற்கு விடப்பட்டிருந்தன. | மீள் ஒப்பந்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் | ஒப்பந்தம் செய்யப்படாத கடைகள் தொடர்பாக அவர்களுக்கு அறிவித்தல் வழங்கி ஒப்பந்தங்களைப் புதிப்பித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது |

**2.2.5 நீதிமன்றதண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்றதண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,718,657 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | உரியகாலத்தில் நீதிமன்ற தண்டப்பணங்களை அறவிடல் வேண்டும் | 2019ம் ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் மீதியில் ரூபா 4,472,643இறுதி காலாண்டிற்குரிய நிலுவை என்பதனால் இவை 2021 இலேயே பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய நிலுவைகள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். |

**(ஆ) முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,150,750 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில் முத்திரைக் கட்டணங்களை பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | 2019 ஆம் ஆண்டிற்கான முத்திரைத்தீர்வை நிலுவைகளை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கான கடிதம் வவுனியா மாவட்ட காணிப்பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காணிப்பதிவுகளுக்கான உறுதிப்படுத்தல் கிடைக்கப்பெற்றவுடன் இதற்கான கட்டணத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருக்கின்றேன் |

## 3 செயற்பாட்டுமீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 43,237,143பெறுமதியான 27 ஒப்பந்த வேலைகள் மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்காமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு அறியக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை | வேலைகள் திட்டமிடப்பட்டதற்கமைய உரிய காலத்தில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | சபையின் தீர்மானத்திற்கமைய சனசமூக நிலையங்கள் ஊடாக ஒரு தொகுதி வேலை வழங்கப்பட்டது எனினும் பெரும்பாலான வேலைகள் அவர்களால் முடிவுறுத்தப்படவில்லை. அத்துடன்‘கம்பரெலிய’திட்டத்தின் வேலைகள் எம்மால் திறந்த கேள்வி கோரல்கள் விடுக்கப்பட்டிருந்த போதும் வேலைகளை மேற்கொள்ள ஒப்பந்தகாரர்கள் முன்வரவில்லை.இதன் காரணமாக இறுதியில் கூட்டுறவு சங்கத்தின் ஊடாக வேலைகளை நடைமுறைப்படுத்த நேரிட்டது. |

**(ஆ) திண்மக்கழிவுமுகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். | இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினருடன் கதைக்கப்பட்டு அங்கு சில திருத்தங்கள், அபிவிருத்தி வேலைகள் செய்த பின்பே சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறக்கூடிய வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. |
| (ii) | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும் | கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்கு திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தரவுகள் மற்றும் தகவல்கள் முறைப்படுத்தப்படல் வேண்டும். | இது தொடர்பான முறையான தரவுகள் பதிவேடுகள் பேணப்படுகின்றது. மேலும் தரவுகள் அடங்கிய முறைகள் மேற்கொள்ள ஆவன செய்யப்படுகின்றது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையால் மீளாய்வாண்டுக்கான K படிவம் கூட்டுமொத்தம் ரூபா 9,729 செலவளிக்கப்பட்டிருந்த போதும் குறித்த படிவங்களை விநியோகிக்கும் உத்தியோத்தர்கள் வினைத்திறனாக செயற்படாததன் காரணமாக 1,692 படிவங்கள் விநியோகிக்கப்படாமல் சபையில் தேங்கி காணப்பட்டது. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | படிவங்களை முழுமையாக விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | நன்கொடையாகப் பெற்ற 02 வாகனங்கள் பதிவுப் புத்தகம் அற்ற நிலையில் காணப்படுகின்றது. | சொத்துகள் தொடர்பான உரிமையை உறுதிப்படுத்தல் வேண்டும். | எமது சபையின் தீர்மான ,yf;fk; VUC/2019/11/25இன் படிஇரண்டு வாகனங்களும் பயன்படுத்தமுடியாத காரணத்தால் தொழில் பயிற்சிநிலையங்களுக்கு வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (இ) | நூலகக் கட்டட நிதி ரூபா474,293கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிராது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்படல் வேண்டும். | வைப்புகளில் ஒன்று மட்டுமே நூலக வைப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றைய வைப்பானது பொது வைப்பாக பேணப்பட்டு வருகின்றது. நிலையான வைப்பு வட்டி சபைக்கு வருமானமாக கிடைப்பதுடன், அபிவருத்தி தேவை ஏற்படும் போது பயன்படுத்தப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 7P விஸ்தீரணம் உடைய காணியை தனிநபர் தன்னிச்சையான முறையில் ஆக்கிரமித்து தொழில்நிலையம் நடாத்தி வருகின்றார் இவ் விடயம் தொடர்பாக நகரசபை கட்டளைச்சட்டம் 255 இன் படி தனிநபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க சபையால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | சொத்துகள் தொடர்பான உரிமை உறுதிப்படுத்த வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பதவி வெற்றிடங்கள்** | | |
| 2019 திசம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 37 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பபட்டிருக்கவில்லை | வெற்றிடங்கள் உரியகாலத்தில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வெளிவாரியாக நிரப்பக்கூடிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெறும் பொருட்டு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னரே நியமனம் வழங்கமுடியும்.மேலும் திறைசேரியின் செயலாளர் அவர்களின் DMS/Policy/Recruitments இலக்க 2019.11.20 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக மறு அறிவித்தல் வரும் வரை எந்தவிதமான நியமனங்களையும் வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| **(ஆ) ஊழியர் கடன்கள்** | | |
| சபையினால் பதவியில் இருந்து பதவிநீக்கப்பட்ட இளைப்பாறிய மற்றும் இறந்த 02 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவைரூபா 93,795 யினை அறவீடு செய்வதற்கு சட்டரீதியானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் நிலுவையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | புதவிநீக்கப்பட்ட உத்தியோகத்தரின் கடன் நிலுவையை அறவீடுசெய்வதற்காக அவரின் E.T.Fகொடுப்பனவு பெறுமதியை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுE.T.F கம்பனியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **(இ) ஊழியர் பிணைகள்** | | |
| 02 உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாகசபையிலிருந்து விலகிய போதும் ஊழியர் பிணை வைப்புக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 16,153பிணைகளை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைபணங்களை மீளளிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல்வேண்டும். | இடமாற்றம் பெற்றுச்சென்றவர்கள் கோரியிருந்தும், நூலகத்தின் சில புத்தகங்கள் தொலைந்துள்ளமையால் அவற்றிற்கான ஊழியர் பிணையினை பணத்தினை செலுத்த முடியாது என பிரதம நூலகர் குறிப்பிடப்பட்டுள்ளதால், அது தொடர்பான ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் சிபார்சுக்கு அமைய சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இழப்பீடு தொகை செலுத்திய பின்னர் ஊழியர் பிணைப்பு பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த 08 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளஆதனங்களுக்கு ஆதனமீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரியினை அறவிடப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | ஆதனங்களை மீள்மதிப்பீடு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்காக வரிமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு பலமுறை கடிதம் அனுப்பியும் இதுவரை அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) | சபையால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டவர்களில் 327 தரப்பினர்களுக்கு வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழ் நாளதுவரை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | குடிபுகு சான்றிதழானது கட்டிட அனுமதிகள் பெறப்பட்டு, கட்டுமாணங்கள் நிறைவுறுத்தப்ட்டு அவர்களால் விண்ணப்பிக்கப்படும் பட்சத்திலேயே வழங்கப்படுகின்றது. இது தொடர்பாக எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும். |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

#### 3.5.1 nrhj;Jf;fis gjpNtl;bw;F cl;gLj;jhik

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபைக்குரிய 50 காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடும் சபையினால் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கிரமமாக காணி மற்றும் கட்டிடங்களை மெய்மையாய்வு செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான அவ்வாறான சொத்துக்கள் தொடர்பிலான உரிமையினை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டடங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான அவ்வாறான சொத்துக்கள் தொடர்பிலான உரிமை உறுதிப்படுத்தல் வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 10 வாகனங்கள் நீண்டகாலமாக பாவனையில் ஈடுபடுத்தப்படாமல் இருப்பதுடன் இது தொடர்பாக உரிய நடைமுறையினை பின்பற்றி பாவனையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நாளதுவரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தி பாவனையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | இவ்வாகனங்கள் Scrapபடையில் விற்பனை செய்யப்படசிபார்சு செய்யப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு பதிவுகளை இரத்துசெய்ய உரிய விண்ணப்பங்கள் 2018 இல் அனுப்பப்பட்டது. எனினும், திணைக்களத்தின் காலதாமத் காரணமாக மீண்டும் விண்ணப்பிக்குமாறு கேட்டுகொண்டதற்கமைய தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இரத்து செய்யப்பட்டபின் இவ்வாகனங்கள் விற்பனை செய்யப்படும;. |

### 3.5.3 விளைவற்றசொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் களஞ்சியத்தில் ரூபா 2,634,997 பெறுமதியான பொருட்கள் 04 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாமல் காணப்படுகின்றது. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 இல் சபையின் களஞ்சியத்தில் ரூபா 3,122,254 பெறுமதியான பொருட்கள் இருந்த போதிலும், பாவனைக்காக ரூபா 487,257 பெறுமதியான பொருட்கள் பாவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் பாவனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. |
| (இ) | சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் குருமன்காடு முதியோர் பூங்கா கூட்டுமொத்தம் ரூபா 2,534,837 செலவில் 18 யூன் 2018 பூரத்தி செய்யப்பட்டிருந்தும் நாளதுவரை பாவனையிலீடுபடுத்தப்படாமலுள்ளது. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குருமன்காடு முதியோர் பூங்காவில் மேலும் சில அத்தியாவசிய வேலைகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதனால், அவை நிறைவேற்றப்பட்டதும், முழுமையாக பாவனையிலீடுபடுத்தவுள்ளோம். |

### 3.5.4 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i)நன்கொடையாகப் பெறப்பட்டிருந்த 03 வாகனங்கள் சபைக்கு உரித்தானதாக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கு உரிமைமாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | மூன்று வாகனங்களும் எமது சபையின் பெயருக்கு உரிமை மாற்றத்திற்கு வவுனியா பிரதேச செயலகம் மூலம் உரிய காலத்தில் எம்மால் மோட்டார் |

| | | |
|---|---|---|
| | | போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டும். நீண்ட காலமாக இருந்தும் இதுவரைக்கும் உரித்தாக்கம் செய்யப்படவில்லை |
| (ii)சபைக்கு சொந்தமான அலுவலகம், பொதுமயானம்,நூல்நிலையம், விளையாட்டு மைதானம், பொதுச்சந்தை மற்றும் சனசமூக நிலையம் என்பன அமைந்துள்ள 50 காணிகளின் உரிமையானது சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்படவில்லை | உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 3.5.5 வருடாந்த கணிப்பீட்டுச்சபை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு வருடாந்த கணிப்பீட்டுச் சபையால் பாவனையிலீடுபடுத்த முடியாது என குறிப்பிட்ட 342 பொருட்கள் தொடர்பாக 438 ஆம்இலக்க 2009 நவம்பர் 13ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைய நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும் | கடந்த ஆண்டு வருடாந்த கணிப்பீட்டுச் சபையால் பாவனையிலீடுபடுத்த முடியாது எனக்குறிப்பிட்ட 342 பொருட்கள் தொடர்பாக 438 ஆம் இலக்க 2009 நொவெம்பர் 13 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைய விலை மதிப்பீடு செய்யப்பட்டு 27.03.2020 ஆம் திகதி ஏல விற்பனை, அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும்; COVID-19காரணமாக நிறைவு செய்யப்படவில்லை தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |

## 3.8 பெறுகை

### 3.8.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டகூட்டுமொத்தம் ரூபா 3,576,226 ஆன 24 ஒப்பந்த வேலைகள் இக்கணக்காய்வு திகதி வரை முடிவுறுத்தப்படாமல் காணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 4. கணக்களிப்பொறுப்பும்நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பாதீட்டுக்கும் உண்மையானவற்றிற்கும் இடையில் ரூபா 18,786 தொடக்கம் ரூபா 13,468,119 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால். இது பாதீடானது முகாமையின் ஓர் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதமையினையே காட்டுகின்றது. | பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். | ஆளுக்குரியவரும்படிகளுக்கு பாதீடு தயாரிக்கும; பொழுதுஅனுமதியளிக்கப்பட்ட ஆளணி183 பேருக்குதயாரிக்கபடுகின்றது. எனினும் கொடுப்பனவுகளானதுஉண்மை ஆளணிஅடிப்படையில் வழங்கப்பட்டதால் பாதீட்டு பெறுமதிக்கும் உண்மை பெறுமதிக்கும் இடையே வேறுபாடுகாணப்படுகின்றது. |